ஓம்

ஸ்ரீ குருப்யோ நம :

# ஸ்ரீ ஸ்வாமீ சித்பவாநந்த ஆச்ரமம்

**வேதாந்த சாஸ்த்ர ப்ரசார ட்ரஸ்ட் (பதிவு எண்: 226 / 1992)**

சத்திரப்பட்டி சாலை, வேதபுரீ, தேனி. - 625 531






ஓம்
ஸ்ரீ குருப்யோ நம:




# உள்ளம் தோறும் வள்ளுவம்

## வள்ளுவம் வழங்கும் வாழ்வியல்
## ஸனாதன நெறியில் வள்ளுவம்

## அறத்துப்பால் - துறவறவியல்

# ஸ்ரீஸ்வாமீ பூர்ணாநந்தர்



## பூஜ்யஸ்ரீ ஓங்காராநந்த
## மஹாஸ்வாமிகளின் சீடர்

**நாள் :**
28, ஆனி 2026

**Date:**
12, ஜூலை 2026

www.vedaneri.org



# அறத்துப்பால் - துறவறவியல்

- இல்வாழ்வின் அறங்களை தவறாது கடைப்பிடித்து விவேக வைராக்யமடைந்து, பிறவிக்கு அஞ்சி, வீடுபேற்றினை அடையவிரும்பி இல்வாழ்வினைத் துறந்து துறவு வாழ்க்கை நிலைக்குச் செல்பவர்க்குரிய அறம் துறவறம் ஆகும்.

- அத்துறவறம், விருப்பு வெறுப்புகள் விலகி மனம் தூயதாவற்காகக் காக்கப்படும் விரதங்களும் அவற்றால் மனம் தூயதான பின் தோன்றுவதான ஞானமும் என இருவகைப்படும்.

- விரதம் என்பது செய்ய வேண்டுவனவும் விலக்கவேண்டுவனவுமான பல. அவற்றுள் முக்யமான சிலவற்றைச் சொல்லத் தொடங்கி முதலில் அருளுடைமையைக் கூறுகிறார்.




அதிகாரம் : 25
அருளுடைமை
அருளுடையவனாக இருத்தல்

- அருள் என்பது உறவுகள் எனப்பாராது இயல்பாக எல்லாவுயிர்களின் மேலும் காட்டுவதாகிய அன்பு. இது கருணை எனப்படும்.

- இல்லறத்திற்கு அன்புடைமை போலத் துறவறத்திற்கு அருளுடைமை முதன்மையானது என்பதால் முதலில் கூறப்பட்டது.

- அன்பு இல்லறத்தில் மனைவி, மக்கள், உறவினர் என வரையறைக்குட்பட்டதாகவும் ஏற்றத்தாழ்வுடையதாகவும் விருப்பு வெறுப்புடன் கூடியதாகவும் இருக்கும்.

- அருள் துறவறத்தில் உலகிலுள்ள உயிர்கள் அனைத்திடத்திலும் பாகுபாடின்றி ஸமமானதாகவும் விருப்பு வெறுப்பற்றதாகவும் இருக்கும்.





**குறள்கள்: 1, 2 அருளின் சிறப்பு**

1. பாகுபாடற்றதால் எல்லாச்செல்வங்களுள்ளும் மேலானது.
2. இம்மை, மறுமை இருமைக்கும் பயன் தரும்.

**குறள்கள்: 3 - 5 அருளுடையவர்க்கு துன்பம் இல்லை**

3. மறுமைத்துன்பம் இல்லை.
4. பாபம் இல்லை.
5. இம்மையில் துன்பம் இல்லை.

**குறள்கள்: 6 - 9 அருளின்மையால் வரும் குற்றம்**

6. வினைப்பயன் மறந்தவர்
7. முக்தியின்பம் இல்லை.
8. மீண்டும் அருளுடையவராதல் இல்லை.
9. மற்ற அறங்களும் அழிந்துவிடும்.

**குறள்: 10 அருள் பிறப்பதற்கு உபாயம்**

10. தன்னைப்போலவே பிறரையும் கருதுதல்.

## 1. அருட்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருட்செல்வம் பூரியார் கண்ணும் உள.

ஆராய்ந்து பார்த்தால் செல்வங்களுள் சிறந்த செல்வமானது அருளாகிய செல்வமாகும். ஏனெனில் பொருட்செல்வம் கீழானவர்களிடத்திலும் இருக்கிறது.

அருட்செல்வம் = அருளாகிய செல்வம், செல்வத்துள் செல்வம் = செல்வங்கள் அனைத்திலும் மேலான செல்வம், பொருட்செல்வம் = பொருளாகிய செல்வம் அல்லது பொருளால் வரும் செல்வங்கள். பசுக்கள், பணம், தங்கம், உறையுள், நிலம் போன்ற அசையும் அசையாச் சொத்துகள், பூரியார் = அறமல்லாத செயல்களைச் செய்பவர்.

தமக்கு இன்பம் தரும் உயிர்களிடத்தில் அன்பும் துன்பம் தரும் உயிர்களிடத்தில் வெறுப்பும் ஏற்படுவது இயல்பு.

அனைத்தையும் துறந்தபின் இன்பதுன்ப விஷயங்களில் விருப்பு வெறுப்பின்றி விதியினால் வருவதை ஏற்று எல்லா உயிர்களையும் தன்னுயிர்போல் எண்ணுவதும் எதிர்பார்ப்பில்லாது வாழ்வதும் அருளுடைமை ஆகும்.

பொருளை ஸம்பாதிப்பது எளிது. அருளை ஸம்பாதிப்பது கடினம். பொருளின் பலன் வரையறைக்குட்பட்டது, சார்புடையது, அடிமைப்படுத்துவது, துன்பக் கலப்புள்ளது. அருளின் பயன் வரையறைக்குட்படாதது, சார்பில்லாதது, விடுதலை எனும் மோக்ஷத்தில் சேர்ப்பது. பொருளைவிட அருள் மேலானது; அடைதற்கு அரிதானது. ஆகவே, அருட்செல்வமே செல்வங்கள் அனைத்திலும் மேலான செல்வம் எனப்பட்டது. முத்தியை விரும்பும் ஒருவன் மற்ற எல்லா உடைமைகளையும் துறந்து அருளுடைமையை வளர்ந்துக்கொள்ள வேண்டும்.

பொருட்செல்வத்தை விட அருட்செல்வம் மேலானது என்பதாகும்.



## 2. நல்லாற்றான் நாடி அருளாள்க பல்லாற்றான் தேரினும் அஃதே துணை.

அறநூல்களும் அறிவுநூல்களும் காட்டும் நல்லவழியில் நின்று ஆராய்ந்து ஒருவன் அருளுடையவனாக வேண்டும். சமயநெறிகள் அனைத்தையும் ஆராய்ந்து பார்த்தாலும் (அவை கூறுவது) இம்மைக்கும் மறுமைக்கும் துணையாவது அவ்வருளே என்பதாகும்.

நல்லாறு = நல்லவழி. எல்லாப் ப்ரமாணங்களாலும் யுக்திகளாலும் ஆராய்ந்து அறியப்பட்ட இருமை வாழ்க்கைக்கும் துணையாகும் நல்லவழி.
பல்லாறு = பல்வேறு சமயங்களும் கூறும் வழி.

வீடுபேற்றைக் கூறும் எல்லா சமயங்களிலும் காணப்படும் பொதுப்பண்பு அருள் ஆகும். எல்லாப் ப்ரமாணங்களாலும் நியாய யுக்திகளாலும் ஆராய்ந்து பார்த்தாலும் அருளே மேலானது என்பது தெரியவருகிறது. எனவே வீடுபேற்றை விரும்பி துறவு வாழ்வுக்கு வரும் ஒருவன் முதலில் அருளுடையவன் ஆகவேண்டும்.

எல்லா சமயங்களாலும் பிரமாணங்களாலும் அருளே இருமைக்கும் துணை என்பது அறியப்படுவதால் அருளுடையவன் ஆகுக.

இவையிரண்டு பாட்டாலும் அருளினது சிறப்புக் கூறப்பட்டது.



## ௩. அருள்சேர்ந்த நெஞ்சினார்க்கு இல்லை இருள்சேர்ந்த இன்னா வுலகம் புகல்.

இருள்நிறைந்த துன்பத்தைத்தரும் நரக உலகத்தை அடைதல் அருள்நிறைந்த மனத்தினை உடையவர்க்கு இல்லை.

இன்னா உலகம் = துன்பம் நிறைந்த நரகலோகம்.
புகல் = புகுதல் – நுழைதல் – சென்று சேருதல்.

இப்பூவுலகில் எல்லாவுயிர்களிடமும் கருணைகாட்டும் அருள் நிறைந்த மனம் உடையவராக வாழ்ந்தவர்கள் மரணத்திற்குப்பின், பாபபலனை அனுபவிக்க இருப்பதான ஒளியற்ற துன்பம் மிகுந்த நரகலோகத்தை அடைதல் இல்லை. கருணை உடையவர்கள் கீழ்நிலையை அடைவதில்லை என்பது கருத்து.

அருளுடையவர் அடையார் நரகலோகம்.



# 4. மன்னுயிர் ஓம்பி அருளாள்வாற் கில்லென்ப
# தன்னுயிர் அஞ்சும் வினை.

ஜீவாத்மாக்களைப் பாதுகாத்து அருளுடையவனாக இருப்பவனுக்கு தான் (துன்பம் கருதி) பயப்படுவதற்குக் காரணமாகிய தீவினைகள் உண்டாகாது என்று சொல்லுவர் (அறிந்தோர்).

மன்னுயிர் = நிலைத்த உயிர் – ஜீவாத்மா.
அஞ்சும் வினை = அஞ்சுவதற்குக் காரணமாகிய துன்பத்தைத் தரும் பாபச்செயல்கள் அல்லது துன்பம் தரும் பாபவினைப்பயன்.

மற்ற உயிர்களிடம் கருணை கொண்டு பாதுகாக்கும் இயல்பினை உடையவர்கள் தனக்குப் பிற்காலத்தில் துன்பத்தைத் தரும் கொலை முதலான பாபச்செயல்களை செய்வதில்லை.
அருளுடைவர்க்குத் தானஞ்சும்படியான தீவினைப்பயனாகிய பாவம் உண்டாவதில்லை.

அருளுடையவன் தீச்செயல்கள் செய்யான் அல்லது அருளுடையவர்க்கு மறுமையில் அஞ்சும்படியான பாபம் ஏற்படுவதில்லை.



## 5. அல்லல் அருளாள்வார்க் கில்லை வளிவழங்கு மல்லல் மாஞாலம் கரி.



அருளுடையவர்க்கு இங்கு துன்பம் உண்டாவதில்லை. அதற்கு காற்று உலவும் வளமுடைய இப்பெரிய பூமியில் வாழ்பவரே சாட்சியாவார்.

அல்லல் = துன்பம்.
மல்லல் = வளம்.
மாஞாலம் = பெரிய உலகம் – உலகிலுள்ள அறிஞர். இடவாகுபெயர்.
கரி = சான்று.

அருளுடையவருக்கு இவ்வுலகில் துன்பம் இல்லை என்பது அனைவரும் நேரிடையாகக் காணும் உண்மையாகும். அருளுடையவர் யாருக்கும் துன்பம் நினைப்பதில்லை, செய்வதில்லை. தமக்கு விதியினால் வரும் துன்பத்தை அவர் பெரிதாகக் கருதுவதில்லை.



பிறருக்குக் கெடுதல் நினைப்பது மனதிற்குத் துன்பம். பிறருக்குக் கெடுதல் நினையாதவர் மனதில் துன்பம் அடைவதில்லை. புறத்தில் வரும் துன்பங்களை விதியின் பயன் என்று அமைதியாக ஏற்றுக் கொள்கிறார். அதனால் அவர் மனதால் ஒருபொழுதும் வருந்துவது இல்லை.

அருளுடைவர்க்கு இம்மைத் துன்பமும் இல்லை.

இவை மூன்று பாட்டாலும் அருளுடையவர்க்கு இம்மை மறுமை எனும் இருமையிலும் துன்பம் இல்லை என்பது கூறப்பட்டது.

## 6. பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி அல்லவை செய்தொழுகு வார்.

(மனதில்) அளுளின்றி (பிறருக்குத்) தீயவை செய்து வாழ்பவரை (வாழ்வின் உறுதிப்பொருளாகிய) அறம் முதலானவற்றை முன்னர் செய்யாமல் (அதனால்) தாம் துன்பம் அடைந்து கொண்டிருப்பதை மறந்தவர் என்று பெரியோர் சொல்லுவர்.

பொருள்நீங்கி = உறுதிப்பொருளான அறம் குறித்த சிந்தனை நீங்கி.
பொச்சாந்தார் = மறந்தவர். தனது துன்பத்திற்குக் காரணம் முன்செய்த தீயவை என்பதை மறந்தவர்.
அருள்நீங்கி = அருளுடைமையிலிருந்து விலகி.
அல்லவை = அறமல்லாத தீயவை.

முன்னர் அறத்திலிருந்து விலகியமையால் துன்பம் அடைந்துள்ளோம் என்ற தம் அனுபவத்தை மறந்தவர் (தம் துன்பத்தின் காரணம் அறியாதவர்) தற்போது பிறரிடம் அருளில்லாமல் தீயசெயல்களைச் செய்து வாழ்கின்றார்.

வாழ்க்கை அனுபவங்களிலிருந்து நாம் பாடம் கற்றுக் கொள்ளவேண்டும்; கற்றுக் கொண்டதை மறவாது இருக்க வேண்டும். இன்ப துன்பங்கள் வினைப்பயனாக விளைபவை என்பது காரண கார்ய விதி. காரண கார்யத்தை அறிந்தவர்கள் துன்பத்துக்கு காரணமான தீயசெயல்களை ஒருபொழுதும் செய்யமாட்டார் என்பது கருத்து.

அருளின்றி தீயவை செய்பவர் அதன் பயனை மறந்தவராவார்.



## 7. அருளில்லார்க்கு அவ்வுலகம் இல்லைப் பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு.

பொருள் இல்லாதவர்க்கு இவ்வுலக இன்பம்
இல்லாதது போல அருள் இல்லாதவர்க்கு முக்தியின்பம் இல்லை.

அவ்வுலகம், இவ்வுலகம் = இடவாகு பெயர். உலக இன்பங்கள்.

இவ்வுலகத்திலுள்ள இன்பத்தை அனுபவிக்க ஏற்கனவே செய்த அறத்தின் பயனாகக் கிடைத்த பொருள் தற்போது வேண்டுவதுபோல, முக்தியின்பத்தை அனுபவிக்க அருளின் பயனான புண்ணியம் வேண்டும்.

நாளை முக்தி இன்பத்தை அனுபவிக்க விரும்புபவன் தற்போது அருளைச் ஸம்பாதித்துக் கொள்ள வேண்டும்.

பொருளில்லாதவர்க்கு இவ்வுலக இன்பமும் அருளில்லாதவர்க்கு முக்தியின்பமும் இல்லை.



## ௮. பொருளற்றார் பூப்பர் ஒருகால் அருளற்றார் அற்றார் மற்றாதல் அரிது.

பொருள் இல்லாதவர் (அவ்வறுமை நீங்கி) பின்னொரு காலத்தில் பொருளுடையவராக ஆவர். அப்படியல்லாமல் அருள் இல்லாதவர் இல்லாதவரே பின்னொரு காலத்தில் அருளுடையவர் ஆதல் இல்லை.



பொருள் அற்றார் = செல்வம் இல்லாதவர் – வறியவர்.
பூப்பர் = செல்வம் அடைவர்.
அருளற்றார் = அருள் இல்லாதவர்.
அற்றார் = இல்லாதவர்.
மற்று = வினைமாற்று.
ஆதல் = அருளுடையவராக ஆகுதல்.
அரிது = இல்லை.

விதியினால் தற்போது பொருளில்லாதவராக இருப்பவர் பின்னொரு காலத்தில் (அவ்விதிமாறும்பொழுது) வறுமை நீங்கிப் பொருள் உடையவராக ஆவர். ஆனால் அருள் இல்லாதவராக இருப்பவர் பாபம் நீங்காமையினால் எப்பொழுதும் இல்லாதவரே. பின்னர் அருளுடைமையை அடைதல் இல்லை.

பொருளின்மை புறம் சார்ந்தது, முயற்சி இருந்தாலும் விதியின் பயனாக வருவது. விதிமாற அதுமாறும். அருளின்மை அகம் சார்ந்தது. நம் முயற்சியினால் மாற்ற முடிந்தது. கிடைத்தற்கரிய இம்மனிதப் பிறவியை அடைந்திருக்கின்ற ஒருவன் தன் முயற்சியினால் அருளின்மையை தற்போது மாற்ற முயலவில்லையென்றால் பாபம் நீங்காமையினால் அவன் பின்னர் அருளுடையவனாக ஆகுதல் அரிதானதாகிறது.

சென்ற குறளில் பொருளும் அருளும் ஒருவகையால் ஒப்புமைப்படுத்தப்பட்டது. இக்குறளில் அதைமாற்றி பொருளின்மையை விட அருளின்மை கொடியது என்று கூறினார்.

அருளில்லாதவர் பின்னர் அது உடையவராதல் இல்லை.



# 9. தெருளாதான் மெய்ப்பொருள் கண்டற்றால் தேரின் அருளாதான் செய்யும் அறம்.

அருளில்லாதவன் செய்கின்ற தர்மத்தை ஆராய்ந்து பார்த்தால் ஞானமில்லாதவன் ஞானநூல்கள் விளக்கும் உண்மைப் பொருளை (பரம்பொருளை) ஒருகால் அறிந்தது போலவாகும்.

தெருளாதான் = ஞானமில்லாதவன்.
மெய்ப்பொருள் = ஞானநூல்கள் காட்டும் மெய்யான பரம்பொருள்.
கண்டற்றால் = கண்டது போல.
தேரின் = ஆராய்ந்து பார்த்தால்.
அருளாதான் = அருள் இல்லாதவன்.



அஞ்ஞானியாக இருப்பவனுக்கு ஏதோ புண்ணியத்தால் ஒருபொழுது ஞானம் ஏற்பட்டாலும் தன்னுடைய அறியாமையால் அதை அழித்து விடுவான். அதுபோல அருளில்லாதவன் ஏதோ காரணத்தால் ஒருபொழுது அறம் செய்தாலும் அதைத் தன்னுடைய அருளின்மையால் அழித்துவிடுவான்.

மற்ற எல்லா அறங்களுக்கும் அருளுடைமை காரணம் என்பது காட்டப்பட்டது.

அருளில்லாதவனிடத்தில் அறம் நிலைத்திருப்பதில்லை.

இவை நான்கு பாட்டாலும் அருள் இல்லாதவர்க்கு வரும் குற்றம் சொல்லப்பட்டது. இதன் மூலம் அருளுடைமையின் முக்யத்துவம் உணர்த்தப்பட்டது.





# 10. வலியார்முன் தன்னை நினைக்கதான் தன்னின் மெலியார்மேல் செல்லு மிடத்து.

தன்னைவிட வலிமையில்லாதவனிடத்தில் தான் அதிகாரம் செய்யும்பொழுது, தன்னைவிட வலிமையுள்ளவர் தன்னிடத்தில் அதிகாரம் செய்தபொழுது அவர் முன்னே தான் அஞ்சி நின்ற நிலையை நினைத்துப் பார்க்க வேண்டும்.

வலியார் = வல்லமையுடையவர்.
மெலியார் = மெலிந்தவர் = வல்லமை இல்லாதவர். உபலக்ஷணமாக மனிதர், மனிதர் அல்லாத பிறவுயிர்களையும் குறிக்கும்.

தம்மைவிடக் கீழிருப்பவரிடம் ஒருவன் கருணையில்லாமல் நடந்துகொள்ள முற்படும்பொழுது, தன்னைவிட வலியவரின் முன் தான் பயந்து இருந்ததை நினைத்து தன்னைப் போலவே எல்லோரும் அஞ்சித் துன்புறுவர் என்று கருதிக் கருணையுள்ளவனாக ஒருவன் தன்னைச் செய்து கொள்ளவேண்டும்.



நாம் எதை விரும்புகிறோமோ அதையே மற்றவர்களும் விரும்புகின்றனர்; நாம் எதை விரும்புவதில்லையோ அதை மற்றவர்களும் விரும்புவதில்லை என்பதை ஒருவன் எப்பொழுதும் நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும்.

இதனால் அருள் பிறப்பதற்கான உபாயம் சொல்லப்பட்டது.





ஓதற் கெளிதாய் உணர்தற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித்– தீதற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளம் உருக்குமே
வள்ளுவர் வாய்மொழி மாண்பு.

(மாங்குடி மருதனார்)

1. Youtube Channels:

   Swami Omkarananda

   Vedapuri Events

   Swami Purnananda Tamil

2. Facebook - Swami omkarananda

3. Facebook Group - Theni Swami Chidbhavananda Ashramam

4. Whatsapp Channel - Theni Swami Chidbhavananda Ashramam




94430 51910

www.vedaneri.org

vedapuricamps@gmail.com